**போரதீவுப்பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1 நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 22 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 12 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து போரதீவுப்பற்று பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பேணப்பட்ட வைப்புப் பேரேட்டின்படி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீளளிக்கப்பட வேண்டிய வைப்புக்கள் ரூபா 7,795,808 ஆக காணப்பட்டிருந்த போதிலும் ஐந்தொகையில் ரூபா 4,085,978 ஆகக் காட்டப்பட்டுள்ளமையினால் மீளளிக்கப்பட வேண்டிய வைப்புக்கள் ரூபா 3,709,830 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 2,192,749 மானியம் நடைமுறைப் பொறுப்பாகக் காட்டப்பட்டு இருந்தது.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 536,986 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் அதற்கு நேர் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 2,565,666 ஆக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) 2008 ஆம் ஆண்டு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் பிரதேச சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட அமுக்கி இயந்திரத்தின் (Hand roller) சக்கரம் (Wheel) இயங்காததன் காரணமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படாது சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை திருத்தம் செய்து மீளப்பயன்படுத்தவோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) பொது நிதியினை வினைத்திறனாகப் பயன்படுத்தும் குறிக்கோளுடன் மாகாண அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கும் அதிக காலம் பயன்படுத்தக்கூடிய கார்பட் இடுதல், கொங்கிறீட் இடுதல், மற்றும் தார் பூசுதல் தவிர்ந்த கிறவல் போடுதல் போன்ற தற்காலிக பாதை அமைத்தலை செய்யாதிருக்க வேண்டுமென 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதனைப் பொருட்படுத்தாது மீளாய்வாண்டில் சபையினால் எட்டு வீதிகளுக்கு ரூபா 1,037,812 செலவில் கிறவல் இடப்பட்டிருந்தது.

## 4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஒழுங்கீனங்கள் மற்றும் குறைபாடுகள் சம்பந்தமாக சபையினால் இதுவரை சீர் செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

| அறிக்கைக்கான தொடர்பு | | உள்ளடக்கப்பட்ட விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2015 | 2.2.2 (ஆ) | 1990 ஆம் ஆண்டு அழிக்கப்பட்ட கட்டிடங்கள், தளபாடங்கள் என்பவற்றின் கிரயத்தை ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| 2015 | 3.2.1 | ஆதனங்கள் மீது வீத வரிகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை |
| 2015 | 4.1 | இடமாற்றம் பெற்றுச்சென்ற ஒன்பது உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 506,576 கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **கட்டுப்பாடுகள்** | **விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்** |
|---|---|
| (அ) கணக்கீடு | வைப்பு பேரேடு நாளதுவரையாகப் பேணப்படுதல். |
| (அ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுத்தல். |